நூலகம்

கார்த்திகை - மார்கழி
2010

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 03 எழுத்து -18

18



தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

**இருமாத கவிதை இதழ்**

NEENKALUM EZHUTHALAM
( Poetry Magazine)

விலை 25/=

நீங்களும் எழுதலாம் – 15
நவம்பர் - டிசம்பர் 2010
ஆசிரியர். எஸ்.ஆர். தனபாலசிங்கம்

படைப்பாளிகள்

| | |
|---|---|
| சபா ஜெயராசா | மன்னூர் அமோகா |
| அஷ்ரபா நூர்தீன் | அபிசேகா |
| செம்பியன் செல்வி | ஞானகுமாரன் |
| ஷெல்லிதாசன் | அ. அச்சுதன் |
| நிலாத்துறை நர்மி | ஏறாவூர் தாஹிர் |
| ச. சரிதரன் | அத்தாஸ் |
| திருமதி. அ. ஹெலனா | க. அம்புறசன் |
| ஜே. பிரோஸ்கான் | எச்.எப். ரிஸ்னா |
| ஆசை எட்வேட் | பாவெல் |
| அ. பாத்திமாஷஹறிதா | எஸ்பி. பாலமுருகன் |
| நிலா தமிழின் தாசன் | ஜெகதர்மா |
| அ. அசனார் | கமலசுதர்சன் |
| சி. சிவனேசன் | கா. தவபாலன் |
| எஸ்.ஆர். தனபாலசிங்கம் | |

கருத்தாடற் களம் : ந. பார்த்திபன்
இரசனைக்குறிப்பு : ஷெல்லிதாசன்
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

வடிவமைப்பு : க. தீபகாந்தன்
அட்டைப்படம் : ஓவியர் கே. சிறீதரன்

**தொடர்புகளுக்கு**

'நீங்களும் எழுதலாம்'

103/1, திருமால் வீதி, திருகோணமலை

தொ. இல. : 0778812912

026 7915836 / 0262220398

E-mail : neenkal@yahoo.com



## முழக்கமும் முடக்கமும்

யுத்தம் ஓய்ந்து இருபது மாதங்கள் கடந்து விட்டன. எனினும் வெற்றி முழக்கங்கள் தொடர்கின்றன. அதுவரை அனைத்து பின்னடைவுகளுக்கும் யுத்தமே காரணமெனக் கொள்ளப்பட்டது. ஆனால் யுத்த காலங்களைவிட கூடியளவில் பொருளாதார முடக்கம் ஏற்பட்டுவருவதை நேர்மையாகச் சிந்திக்கின்ற எவரும் ஏற்றுக்கொள்வர்.

மேலும் இயற்கை அனர்த்த இடையூறுகளும் அதிகரித்து வருகின்றன. வெள்ளம் வருமுன் அணைகட்டுவது பொறுப்புள்ளதும், இறைமையுள்ளதுமான ஓர் அரசின் கடப்பாடாகும். ஊழல் நிறைந்த நிர்வாகமும், சுரண்டலை ஏற்றுக்கொள்ளும் அமைப்புக்களும் இருக்கும்வரை இருபது மாதங்களென்ன இருபது, இருநூறு வருடங்கள் சென்றாலும் எதுவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை.

'நமக்கு தொழில் கவிதை' என்பது மட்டுமல்ல நாட்டிற்குழைத்தல் என்று பாரதி சொன்னது போல சமூக அவலங்களுக்கெதிராகக் குரல் கொடுக்க 'நீங்களும் எழுதலாம்' தயங்கப்போவதில்லை. மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் பாடுபொருளாக்குவதன் மூலம் தேவைகளை இனங்காட்டுவது நீங்களும் எழுதலாமின் சமூகப்பணியாக அமையும்.

புதிய புதிய உத்திகள், முறைகள் என்பவற்றைக் கையாண்டு தெவிட்டாத வகையில் கவிதைகள் படைத்திட வேண்டி நிற்கின்றோம்.

'நீங்களும்எழுதலாம்'
அன்புடன்
ஆசிரியர்

## கிராமத்து வெளி

வானத்து ஓடைகளாய்
வந்தது இருள் -
எங்கள் கிராமத்து எக்கம்
எருத்துவரப்பில்
எரிமலைக்குள் புகுந்தது -
தூரத்து வெளியில்
ஒரு குருவி
தானியத்தை மெல்ல முடியாது
விக்கித் தவித்தது
எங்கள் கிராமத்துச்
சுந்தரத் தோற்றம்
மந்த வெளியின்
மாடாய் அலைந்தது-
நெடுநாள் கோயில்
மாடத்து விளிம்பில்
நாட்டிய அரங்கம்
இறக்குமதி செய்யப்படுகிறது

- பா. ஜெயராசா -

## கிராமத்து சோளகம்

எங்கள் கிராமத்து மகிழ்ச்சி
தெருவோரக் குப்பையாய்க்
கிடக்கிறதுகாலவோட்டம்
காங்குப்பனையின்
வதிவிடங்களைத் தேடியது
கோயில் மடம் பழுப்பேறி
செவ்வந்தி அலகுகளாய்
நிற்கிறது -
குந்தியிருந்த மதிற் சுரிற்
சுவரொட்டிக் கறையான்கள்
ஏறுகின்றன -
வெள்ளம் ஓடிய வாய்க்காலின்
குறுங்கற்கள்
பல்விரித்துச் சிரிக்க முயலும்
புதுக்கோலம்.
உதிர்ந்து விழுந்த மாஞ்சருகின்
ஒப்பனையாய்க் கிடக்கும்
ஒரத்துச் செம்பாடு -
ஒருகால் இடைவெளி கழிய
கருநிழலின் தோகையாய்
சோளகம் எழுந்து வருமென்று ஏங்க
நீட்டி வரையப்பட்ட உலகப்படமொன்றைக்
காற்றுச் சுழற்றிக் காட்டியது -



## நம்பிக்கை

காற்று வெளியில்
கனவுகள் சுமந்து
ஊர்வலம் போகும்
என் சிந்தனைக் குருவி

நேற்றைய நிகழ்வும்
இன்றைய நிஜமும்
நெஞ்சை நெருடும்
நாளையின் வருகை மட்டும்
இன்னும்
எதிர்பார்ப்புகளை விதைத்துக்கொண்டு
என்னுள்ளே
ஆழமாய் வேரூன்றும்.

அண்டவெளியில்
வெகு ஆனந்தமாய்ச் சஞ்சரித்து
மீண்டும்
மண்ணுக்குத் திரும்பும்
என் சிந்தனைக் குருவி

எங்கிருந்தோ வந்து
ஒட்டிக் கொள்ளும்
அதன் இறக்கைகளில்
பொன் வண்ணம்

மெல்லென விரிக்கும்
அதன் இறக்கைகளின் விகசிப்பில்
என் குருட்டு உலகம்
காணாமல் போகும்.
என் எதிரே நீண்டு கிடக்கும்
பாதைகள் முழுவதுமாய்
அதன் பொன் வண்ணம்
பிரகாசிக்கும்.

தனித்துவமாய்
நான் தலையெடுப்பேன்
எதுவுமே இல்லாத
என் வெறுமையை விரட்டி
நாலுபேர் மத்தியில்
என் பிரசன்னத்திற்கு
சாலையமைத்து
சாமரம் வீசிநிற்கும்
என் சின்னக் குருவி.

- மண்டூர் அசோகா -

## நவம்பர் இருபத்தைந்து

வன்முறைக் கெதிரான
வாதாட்டங்களின் குரல்கள் ஒலித்தன
அச்சம், அவலம்
அலங்கோலம் தாங்கி
துச்சமாய் மதிக்கப்பட்ட முகங்கள்
ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.

அவை முகங்கள் அல்ல!
அநீதியின் சாட்சிகள்!
ஆக்கிரமிப்பின் சிதைவுகள்!

உற்று நோக்க
உள்ளம் படபடத்தது
ஆனாலும் என்ன?
ஒவ்வொரு தினத்திலும்
ஊமையாய் ஓலமெழுப்பி
உணர்வுகளை அடக்க
பழக்கப்பட்ட கையாலாகாத்தனம்
எமக்கு!

நிரந்தரமான, முடிவற்ற
பெண்ணுக்கெதிரான வன்முறையின்
ஆறாத காயங்களை
ஆராய முற்படும்
எவனால் எது செய்ய முடியும்?

ஆகக்குறைந்த பட்சம்
என் சகோதரிகள்
சுதந்திரமாய் சுவாசிக்க
ஒவ்வொரு
ஒவ்வொரு ஆணின்
இதயத்திலும் ஊறியிருக்கிறது
ஆதிக்க உணர்வினை
எந்த இயந்திரமாவது கொண்டு
உங்களால் அகற்ற முடியுமா?

-அஷ்ரபா நூர்தீன் -



## இருப்பை இழந்தவர்கள்

முரணான குணமாயினும்
முறையான வளர்ப்பால்
எங்கள் எல்லைக்குள்
எல்லாமே இயல்பாயிருந்தன
ஆடு, மாடு, கோழி, பூனை
நாய் ..........................
..............................

எவனோ ஒருவன்
எறிந்த எலும்பை
எடுத்த நாய்
எல்லை தாண்டி
அவனோடு சென்றதனால்
எல்லாமே இயல்பிழந்தன

ஆடுதல், பாடுதல், விளையாடுதல்
பகிர்தல், புரிதல் என்று.............
இன்று
இருப்பும்.........

-அபிசேகன், அல்வாய் -

........................................................................

## பதவியும் பட்டமரமும்

பதவியை இறக்கிவிட்டு
பார்த்து இரசிக்கும்
இரணிய அதிகாரிகள்
முகம் பார்க்க நாணுகிறேன்

பதவியும் பட்டமும்
நாணயமும் சம்பளமும்
உயர்ந்து விட்டால்
உமக்குப் பொறுக்காதா?

'நிலையாமைப் பந்தலுக்குள்தான்
நீயும் நானும்
உழைப்பாலன்றி குறுக்குவழியில்
படியேற நினைக்கின்றாய்

உனை இருத்தி
இரசிக்கும் துட்டரும்
பட்டே தீருவர் ஒருநாள்
பட்டமரமாய்!

-செம்பியின் செல்வி-

## சில நேரங்களில் சில நினைவுகள்

நூலகங்களுக்குப்
போய்
அடக்கி வைக்கப்பட்ட நூல்களைப்
பார்க்கும் போது தானே
தெரிகிறது
இது வரை கற்றது
ஊசி முனையளவு கூட
இல்லை என்று

அலைகளைப் பார்க்கும் போதுதானே
தெரிகிறது
விழுவதும் எழுவதும்
எல்லாவற்றுக்குமே பொதுவென்று
எந்த ஊர் போனாலும்
சாப்பிட்டு
மிஞ்சிய சோற்றிலே
நினைவு வருகிறது
எனது நாய் ஜிம்மி முகம்

விமானங்களைப்
பார்க்கும் போதெல்லாம்
முள்ளி வாய்க்காலில்
கொள்ளி வைக்கப்பட்டவர்களே
நினைவு வருகிறது.

சீக்கியனைப்
பார்க்கும் பொதெல்லாம்
இந்தியன் ஆமியும்
பிரம்படிலேன் பிணங்களுமே
நினைவு வருகிறது.

-மட்டுவில் ஞானக்குமரன்-

*****************

## அரச ஊழியன்

காட்டாற்று வெள்ளத்தால்
வீழ்ந்த கவலையுடன்
சம்பளம் எடுக்கச் சென்றேன்
வெள்ள நிவாரண நிதிக்கு
ஒரு நாட் சம்பளம் அதில்
காணாமற்போயிருந்தது!

## பேச்சுப்பல்லக்கு

ஒரு கை அள்ளிவழங்க
மறு கை கிள்ளித் தெளிக்க
உதடு பேசுகிறது
ஒரு தாய் மக்கள்!

-ஜெஸ்லிதாசன்-



## செல்லாக்காசுகள்

தேர்தல் கால வாக்குறுதி
அரசியல் சீர்திருத்த வாக்கெடுப்பில்
சிதறுண்டு போச்சுதடா!

போர் நிகழ்ந்த தமிழர்தம்
பூமி இன்னும் உண்மையில்
சீர் பெறவில்லையப்பா!

தார்மீகம் சமத்துவம் சமரசம்
சன்மார்க்க மெல்லாம்
வேரோடு பிடுங்கி வீசப்படுவதல்லால்
வித்திட்டு விருட்சமாக்க
ஓர் காலம் என்று வரும்?

போர் வெற்றி பெற்றாலும்
அமைதித் தேர் இழுக்கமுடியவில்லை
தேசியப் பிரச்சினை
தீர்க்கப் படாததால்!

சாயம் வெளுத்தவர்கள்
சந்தி சிரிக்க - பெரிய
தவறை இழைத்தோர்கள்
சோரம் போனவர்கள்
மாஜா ஜாலம் புரிந்தாலும்
மக்கள் தீர்ப்பின் மூலம்
தக்க பாடம் படிப்பார்கள்!

கொள்கை தவறும்
குரங்கு மனம் படைத்த
சில்லறை வாதிகள் அரசியலில்
செல்லாக் காசுகளே!

- சேனையூர். அ. அச்சுதன் -

********************************

## கவிதைக்கான

*பயில்களம்*
*பரிசோதனைக்களம்*
*காத்திரத்திங்களம்*
*கருத்தாடற்களம்*
*விளக்கக்களம்*
*விமர்சனக்களம்*

நீங்களும் எழுதலாம்

## வலியின் வலிமை

*வலிகளுக்கு கூட
எத்தனை வலிமை...?*

*நடவடிக்கைகளை
முடமாக்கி...
மனதையும்
அதைரியப்படுத்தி...
வேடிக்கை பார்க்கும்
மாபெரும் சக்தி அதற்கு!*

*நிகழ்ந்து போன
கசப்பான நினைவுகளை
அதிகார பூர்வமாகவே
நெஞ்சத்திடம் ஒப்படைக்கிறது...*

*உள்ளமும் உடலும்
அடிமையாகி...
வலிகளுக்கு அடிபணிந்து...
ஒய்யாரமாக வந்தமர்ந்த
ஞாபகங்களை அசைபோடுகிறது...*

*நொந்து...
மனம் தளர்ந்து...
தாங்க முடியா வேதனையால்
உடல் ஜடமாகும்
வேளையிலே புரிகிறது...
வலிகளுக்கும்
இத்தனை வலிமையென்று...! ...!! ...!!!*

*-திவித்துறை தர்ஷி -*



## வினாடித் துளிகளிலே...

வினாத் துளிகளிலே
விளைவுகளும்! நிகழ்வுகளும்!
மண்ணிடையில், மயிரிழையில்,
இமை வெட்டும் கணப்பொழுதில்...
வினாத் துளிகளிலே
விளைவுகளும்! நிகழ்வுகளும்!
நலவுகளும், கெடுதிகளும்,
நிலம் பயக்கும் முடிவுகளும்,
விபத்துக்களாய் அமைந்து
வினை சேர்க்கும் துயர்களுமாய்...
வெற்றிகளாய், தோல்விகளாய்,
பற்றில்லா வெறுமைகளாய்...
மண்ணிடையில், மயிரிழையில்,
இமை வெட்டும் கணப் பொழுதில்!
பாதங்களைச் சற்றே
பள்ளத்தில் வைத்திருந்தால்...
முன் பக்கம் பார்த்திருந்தால்...
பின்பக்கம் சாய்ந்திருந்தால்...
தலையை பணித்திருந்தால்...
கொஞ்சம் நிமிர்ந்திருந்தால்...
பேசாதிருந்திருந்தால்...
பேசிப் பார்த்திருந்தால்...
ஊதி, அணைத்திருந்தால்...
அணையாமல் விட்டிருந்தால்...
முன்காலை வைத்திருந்தால்...
வைக்காமல் இருந்திருந்தால்...
தொட்டுப் பார்த்திருந்தால்...
தொடாமல் விட்டிருந்தால்...
ஒவ்வொரு நிகழ்வுகளும்...
ஒவ்வொரு விளைவுகளும்
மண்ணிடையில், மயிரிழையில்,
இமை வெட்டும் கணப்பொழுதில்!

**- ஏறாவூர் தாஹிர் -**

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

## 'மறுபடியும் வனவாசம்'

நீல மலர்களைத் தேடினேன்
அந்த வானத்தில்...
என் உடல் முழுவதும் மலர்க்குவியல்
ஸ்பரிக்கும் என்கிற கனவுகலைய,
முள் முனைகளில் என் குருதி...!

என் பாதங்கள் தேடிய பயணம் – அது
பாரதப் போர் கொண்ட சலனம்!
மானமும், முகமும் இழந்த மானுட
இனத்தினிற் சனனம்... அதனால்
மனமெங்கனும் துயரத்தின் படலம்...!

தர்மம் தலை கவிழ்ந்து – அது
சிலை வடிவில் மட்டும் சிரிக்கின்ற
தேசமிது...

கல்லறைகளில் என் முன்னோரின்
சாபம் நாளை
அவர்களைத் தீர்ப்பிடத்தான் போகிறது!

என் தேசமோ – இன்று
பொய்மையின் கூடாரம்!
வெற்று அலங்காரங்களும், பதாதைகளும்
உண்மையில் பகல் வேஷங்கள்!

திண்மையின் நிழல் மறைக்கப்பட்டு,
எங்குமே போலி' கொண்டாடப்படும்
இம் மண்ணில்
மறுபடியும் புனிதம் தழைத்துச் சிரிப்பது
எந்நாளோ!?

–முறவூர் ச.சசீதரன்
கிழக்குப்பல்கலைக்கழகம்



## பதில் ஏதும் தருவீரா?

மனசு மாறவில்லை ஏக்கம் தாளவில்லை
காணும் இடமெல்லாம் தோற்றம் தந்து நின்றாய்
சொன்ன நேரத்திலன்று நீ வந்து நின்றாலும்
வன்செயலொன்றில் நான் இங்கு சிக்கியதால்
வாக்குறுதி மாறியதாய் நீ கொண்ட எண்ணமது
வந்தென்னைத் துளைத்தெடுத்து வாள் கொண்டு அறுக்கிறது

நேரடியாகக் கண்டுன்னை விளக்கம் சொல்ல வேண்டும்
தேடியலைந்திட்டேன். கால் கடுக்க நடை நடந்தேன்
வீட்டிலும் நீ இல்லை. வேறோர் இடத்திலும் காணேன்
சகோதரி வீடதனில் தங்கினாளா? உசாவியும் அறியவில்லை
தொலை பேசியுள்ள இடம் தூரத்துச் சோதரிதான்
அங்கு கேட்டு நின்றேன் பதிலேதும் கிட்டவில்லை

கண்முன் தோன்றுமந்தக் காந்தள் முகமலரைக்
கண்டுயிர்ப்பு விடுவதெப்போ, கதைகதையாய்ச் சொல்வதெப்போ?
மனது குழம்பியுள்ளது. கலக்கம் தெளியவில்லை.
கண்ணாரக் கண்டுகொள்ள மனம் தெளிய
வந்தென்னைப் பார்ப்பீரா, இல்லையெனில்
இக்கவிதை படித்த பின்பு பதில் ஏதும் தருவீரா?

– வெலிப்பன்னை அத்தாஸ் –

## மனவலி

*அஸ்தமனத்தைக் காத்திருக்கும் மலராய்*
*ஆயிரம் கனவுகளையும்*
*ஆயிரம் நினைவுகளையும்*
*இதயத்தில் பூட்டிவைத்து*
*அற்புதமாய் ஜொலித்த அகல்விளக்காம்*
*பாசமென்னும் போலி போர்வைக்குள்ளாகி*
*கண்ணீரும் கவலையுமான சிறைக்குட்பட்டு*
*காலத்தோடு போராடி – இன்று*
*விதியோடு தோற்றுவிட்ட*
*விந்தையான மலர்*
*கடந்த கால நினைவுகளோடு*
*இன்னும் சிலகாலம் வாழப்போகிறது*

-திருமதி. ஜெலனா அரியநாயகம், பாலையூற்று-

## இன்னுமொரு பிரிவு

யாருக்கும் தெரியாமல்
வாங்கப்பட்ட சுதந்திரம் போல்
நான்கு வருடத்தின்
கவலையற்ற வாழ்வுகள்
இன்றுடன் முற்றுப்பெற
காங்கணம் கட்டி நிற்பதென்ன

ஆசிய நாட்டுக்காரன் என்றாலே
அடிமை என்ற அர்த்தத்தின்
தொனியா...? இல்லை
உனக்குக் கிடைத்த
சாத்தியங்கள் இவ்வளவுதான்
என்ற முடிவுகளின் முடிவா...?

இன்னும் ஒரு வருடம்
இருக்கலாம் என்று
இன்றுதான் என் இதயம்
சத்தமின்றி மெல்லமாய் முனகியது
விடுதலைக்கான உடைப்பைத் தேடி
அலைந்த ஒரு கைதியின்
அவாவாய் காலம் கடந்தது
ஞாபகம் இருக்கிறது ஆனால்
முற்றுப் பெற்ற வாழ்வைத் தேடி
முயன்று ஏமாறும் பழமைவாதப்
பிரயத்தனங்கள் இனியும் வேண்டுமா...?

முடிவுகள் இறுகிய பின்
ஆரம்பத்தை தேடுவதுதானே
இன்றைய எம்வாழ்வு
சாத்தியமற்ற காலத்துக்காய்
அந்தகன் போல் தொக்கி
நிற்பதில் பயனேதுமில்லை

சோகத்தை சொந்தம் கொண்டவர்
நாமாகத்தான் இருக்க முடியும்
அரசியல் ஆட்சி தொடக்கம்
அகிம்சை போராட்டம் வரை
நம்மவரின் நட்புகள்
புதைக்கப்பட்ட பிணங்களே

இதுவொன்றும் அவற்றைவிட
இறுக்கமும் அல்ல நாம்



மனிதர்களும் அல்ல
வெளியேறும் விசுவாசியே
இனிமேல் தான் உன்னை
எல்லாம் இயக்கப் போகிறது
நாணயப் பக்கங்களாய்
வாழப் பழகிக் கொள்

உன்னுடைய தியறியை
வாழ்க்கையோடு ஒழுங்குபடுத்து
நண்பர்கள் இனியும் வருவர்

வாழ்க்கை உன்னை கஷ்டப்படுத்தும்
இனிமேல் நீ கவனம்
பாம்பில் பிடித்துத் தொங்கும்
விசவாழ்வு வடகிழக்கின்
ஒவ்வொரு பிரதேசத்திலும்
பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது
உன்னுடைய பலவீனங்களை
ஆட்கொள்ள அங்கே
நச்சு மரங்கள் காத்திருக்கின்றன.

இந்தப் பிருந்தாவன பூஞ்சோலையிலிருந்து
பிரிவுத்துயரை விட்டவிட்டு
புறப்படு உனக்காக
சொப்பனங்கள் மட்டும்
மாறுதல் இன்றி இலவசமாய்
கிடைத்துக் கொண்டே இருக்கும்
அவற்றில் நமது நினைவுகளின்
நிழல்கள் முகாரி இசைக்கும்
அதனூடே நாளைகள் தெரியும்
இன்னுமொரு பிரிவாய்.....

- க. அன்பழகன் -

---

**கடிதவழி தனி இதழைப் பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும்.**
**வருட சந்தா 200/= (தபாற் செலவு உட்பட)**
**காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய தபாலகம் : திருகோணமலை.**
**முகவர் : எஸ். ஆர். தனபாலசிங்கம்**
**103/1, திருமால் வீதி, திருகோணமலை.**

## தீ குழைத்து அப்பும் நினைவு

*நரம்பு வழியே உனதான ஞாபகிப்பு*
*நண்டுகளின் ஓவியமாய் பதிந்து போக*
*துயிலை தொலைத்து*
*ஷாத்தான் உலாவும் நடுசியில் மறந்து*
*போகவே விரட்டி விரட்டியடிக்கிறேன்*
*நினைவுகளை*
*முடியாத போதும் என்னுள் நகர்ந்து திரியும்*
*ஹார்மோன்கள் கோடை குடித்திட்ட ஈரம் போல்...*
*சாய்ந்த சருகாய் - உணர்வு பாம்பர் நெளிந்து*
*சிரிஷ்டிக்குரிய நரம்பு வழியே*
*மீண்டும்... மீண்டும் துளிர் விட்டுப் போகுது*
*மறுப்பெய்த நினைக்கும் உனதும் எனதுமான*
*நேற்றின் ஞாபகிப்பு...!*

*கிண்ணியா ஜே. பிரோஜ்கான் -*

## எழுவாய் பயனிலை!

காதலித்து
கண்ணாமூச்சியாடி
நீ இன்று
தாய்மைக் கோலத்தில்
தயவாய் வாழ்ந்த படி!

கவிதை எழுதியே
காகிதமாகி
சேற்றில் புதைந்த
செருப்பாய் நான்!

இதயத்தின் வெடிப்புகளில்
இம்சையின் சித்திரவதை...
உள்ளார்ந்த மனவெளியில்
இன்பமினி எவ்வகை?

இலக்கியமாய் எம்மைப்பார்த்தால்
நீ எழுவாய் நான் பயனிலை
சேர்ந்திருந்த நாள் எல்லாம் - இனி
என்ன நினைத்தாலும் பயனிலை!!!

**நியத்தலாவ எச்.எம். ரிஸ்னா**



## தெருக்குரல்

நல்ல சொல்லாடல் இல்லாத இல்லத்தில்
நல்ல நாள் ஒருநாளும் இல்லை.

........

வீட்டுக்கு நல்ல 'வளை' வை நெஞ்சக்
கூட்டுக்கு நல்ல நினைவை வை

........

திடீர்த்தாக்குதலை சமாளிக்கும் போர் வீரனாய்
வலை வீசுவாளின்
பிடியில் தப்பும் திறன் வேண்டும்.

........

கூழ் முட்டையிது என்று சொன்னதற்காக
அவனை குஞ்சு பொரிக்கச் சொல்லக் கூடாது

........

ஆன்மா கடவுளை நோக்கி உயரும்
குற்றங்களுக்கு
துன்பங்கள் தண்டனையாய்க் கிடைக்கும்.

**-ஆசை எட்வேட், அன்புவழிபுரம்-**

*******************************

## கல்விக் கூடங்கள்

**ஆறு வயதில்**
**இங்கே**
**அடியெடுத்து வைக்கும்**
**பிள்ளையை**
**அறுபது வயதில்**
**சமூகத்துக்கு**
**வழங்கும்**
**தொழிற்சாலை இது**
**வாழ்க்கை பற்றிய**
**நம்பிக்கை ஏதுமற்று**
**தான் உழைத்து உண்பதற்கு**
**ஒரு தொழிலைச் செய்வது**
**தரக் குறைவான தென உணரும்**
**மனநிலைக்கு**
**இட்டு வந்து**
**வெளித் தள்ளிவிடும்**
**தொழிற்சாலைகள் இவை.**

**-பாவெல்-**

**பயில்களம்**

## சிலவேளை இப்படி நடக்கலாம்?....

உலக வாழ்க்கையின்
ஒவ்வொரு நிமிடங்களும்
சுருங்கிக் கொண்டிருக்கின்றது

கர்ப்பம் தரிப்பதைவிட
குளோனிங் கோட்பாட்டிற்கே
முன்னுரிமை...

குழந்தைகளை
சந்தைப்படுத்தும் இனி
குழந்தை உற்பத்திக் கம்பனிகள்

இருநூறு வருடங்கள்
உயிர்வாழ்
ஊடகங்கள் தேடப்படும்

செயற்கை தாவர
அழகே சூழலுக்கு
தாவர உற்பத்தி குறையும்

ஒட்சிசன்
குறைந்து
உயிர் கொல்லும்

காசுக்கு
கடைகளில்
கடைசி விலையில்
ஒட்சிசன் விற்கப்படும்

றோபோக்கள்
வாக்குரிமை கேட்கும்
இயந்திர ஆட்சி நடக்கும்

மனிதத்துவம்
மனிதநேயம் என்பன
மயானம் நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கும்

நிலம் குறையும்
பாதி பூமியை
கடல் தின்னும்



வேற்றுக் கிரகத்தில்
குடியுரிமை கோரப்படும்
அங்கேயும் எல்லைப் பிரச்சினை வரும்
துப்பாக்கிகள் மோதிக்கொள்ளும்
மனிதர்கள் சாவார்கள்.

இதனால்
சிலவேளை
இப்படி நடக்கலாம்
மனித நாகரீகம்
மறுபடியும் மாண்டு போகலாம்?....

ஆ. பாத்திமா ஹஹறிதா
12 கலைப்பிரிவு
தி/விபுலானந்தா கல்லூரி

**வசன கவிதை**

**1.காட்சி**

**முதற் கிளை : இன்பம்.**

1

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமை
யுடைத்து, காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று, திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது
கடல் இனிது. மலை இனிது. காடு நன்று.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்,
மலரும், காயும், கனியும் இனியன
பறவைகள் இனியன
ஊர்வனவும் நல்லன.
விலங்குகளெல்லாம் இனியவை.
நீர் வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று
உயிர் நன்று. சாதல் இனிது.

-பாரதியார்-

**கருத்தாடற் களம்**

# புதுக்கவிதை வாழ்வும் வளமும்

புதுக்கவிதை என்று புதுக்க விதை போடுகிறார்கள் என்று மரபுவாதிகள் குறிப்பாக மரபுக் கவிஞர்கள் கொதித்தெழுந்தனர். இது சிறு கதையின் தோற்றத்தின் போதுசிறு கத்தை (அளவுக்கணக்கில்லாமல் கட்டப்படும் வைக்கோல்) என்று பழமைவாதிகள் குறிப்பிட்டது போல அக்காலத்தில் அமைந்திருந்தது. ஆயினும் புதுக்கவிதை தோன்றி அண்ணளவாக அரை நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது. தமிழிலே புதுக்கவிதை 1934 இல் தோற்றம் பெற்றுள்ளது. இதன் பிதாமகர் ந. பிச்சமூர்த்தி. இவர் "என் புதுக்கவிதை முயற்சிக்கு யாப்பு மரபே காணாத அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனின் புல்லின் இதழ்கள் கவிதைத் தொகுதியே காரணம் எனக் கூறுகின்றார். இக்கவிதைத் தொகுப்பு 12 கவிதைகளின் புதுக்கவிதைத் தொகுப்பாக 1855 இல் வெளிவந்துள்ளது. ந. பிச்சமூர்த்தி 'வால்ட் விட்மனின் புல்லின் இதழ்கள் புதுக்கவிதைத் தொகுப்புத்தான் எனக்கு புதுக்கவிதையின் ஊற்றுக்கண்ணைத் திறந்தது என்றும் தொடர்ந்து பாரதியின் வசன கவிதையைப் படித்த போது என் கருத்து வலுவடைந்தது" என்றும் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

**ந. பார்த்தீபன் (ஆசிரிய மாணவ விரிவுரையாளர்)**

புதுக்கவிதை எழுதுவதற்கான காரணத்தைப் பிரகடனமாக குறிப்பிடும் பிச்சமூர்த்தி "கவிதை பற்றி நான் சில திட்டவட்டமான கருத்துக்கள் உடையவன். கருத்தாழமோ, உணர்ச்சியோ, இயற்கையின் தரிசனமோ இல்லாத ஓசைப் பந்தலைக் கட்டும் தந்திரத்தை பிற்காலக் கவிஞர்கள் கற்றுவிட்டார்கள். அதன் விளைவாக ஓசை இன்பமே கவிதை என்ற கொள்கை பரவிவிட்டது. இக்கொள்கைக்கு என் கவிதை மறுப்பு" என்று கருத்துரைக்கின்றார். புதுக்கவிதைத் தாத்தா மு. மேத்தா என்று இன்று பலரும் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் மேத்தாவின் கூற்றொன்று பின்வருமாறு அமைகிறது. "முன்னோடி என்ற மகுடத்திற்காக எவர் வேண்டுமானாலும் முட்டி மோதிக் கொள்ளட்டும், எனக்குக் கவலை இல்லை. அவர்களை முறைத்துப் பார்க்க வேண்டியவர்கள் புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன், சி.சு. செல்லப்பா போன்றவர்களே நான் அல்ல. மேலும் ந. பிச்சமூர்த்தி "1934 இல் முதல் சோதனை ரீதியான கவிதைகளை எழுதத் தொடங்கினேன். நண்பன் கு.ப. ராவும், நண்பர் வல்லிக்கண்ணனும் பின்னர் இப்பாதையிலே சேர்ந்து கொண்டனர்" என்று குறிப்பிடுவதையும் பார்க்கிறோம்.



மேற்கூறிய கூற்றுகளிலிருந்து ந. பிச்சமூர்த்திதான் புதுக்கவிதையின் முதல்வர், பிதாமகர் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. என்பதுகளுக்குப் பின் ஈழத்துப் புதுக்கவிதை என்ற ஆய்வு முயற்சியில் ஈடுபட்ட பொ.கமலரூபன் "கு.ப.ராவும், புதுமைப்பித்தனும் புதுக்கவிதையிலும் சிலவேளை சிறுகதையில் போன்று சாதனைகளைச் செய்திருக்கலாம். ஆனால் அவர்களை விரைவாகவே "சா" அணைத்து விட்டது. பிச்சமூர்த்தி இதனை நல்லபடி செய்தார்" என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். புதுக்கவிதை வளர்ச்சியில் மணிக்கொடியின் மறைவுக்குப் பின் வந்த எழுத்துப் பத்திரிகைக்கு கணிசமான இடமுண்டு. எழுத்துப் பத்திரிகையின் ஆசிரியர் சி.சு.செல்லப்பா "பிச்சமூர்த்தி திடுமென புதுக்கவிதைக்காரராக மலர்ந்து விடவில்லை வசன கவிதைக்காரராகத்தான் மொட்டு விட்டார். பின்னர் பல பரிசோதனைகளைச் செய்தார்: என்று குறிப்பிடுகிறார். பிஷீ என்ற புனைபெயருடன் தனது புதுக்கவிதை வாழ்வை பிச்சமூர்த்தி தொடங்குகின்றார். புதுக்கவிதையின் திருப்பு முனையாக "காட்டுவாத்து" என்ற இவரது தொகுதி விளங்குகின்றது.

புதுக்கவிதையை கட்டற்ற கவிதை என்பார்கள். யாப்புச் சிறைக்குள் நலிந்து கிடந்த கவிதைப் பெண்ணை சிறையுடைத்து மீட்டெடுத்த முயற்சியே புதுக்கவிதை முயற்சி. ஆனால் முதலில் கட்டுடைத்து வெளிவந்தவை வசன கவிதைகளே. உள்ளத் தெழுந்த உணர்வுகளை, கனவுகளை, கற்பனைகளை, சமுதாய அவலங்களை மரபு முற்றிலும் கெடாத வகையில் எளிமையானதும், புதுமையானதுமான ஒரு யாப்பிலே வெளிப்படுத்திய கவிதைகளே நவீன கவிதைகள், பிச்சமூர்த்தி குறிப்பிட்ட "பாரதியின் வசன கவிதையை படிக்க நேர்ந்ததும்" என் கருத்து வலுவடைந்தது என்பதிலிருந்து பாரதியின் வசன கவிதை முயற்சி புதுக்கவிதைக்கு வித்திட்டது என்பது உண்மையே, ஆயினும் பாரதியின் வசன கவிதைகள் வேறு புதுக்கவிதைகள் வேறு என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். பாரதியின் வசன கவிதைகளில் புதுக்கவிதைகளுக்குரிய சாயல்களும் உள்ளன. ஆயினும் பாரதியும், மஹாகவியும் மரபுக்குள் நின்று புதுமை செய்த நவீன கவிதைக்காரர்களேயன்றி புதுக்கவிதையாளர்கள் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இனி, ஈழத்திலே புதுக்கவிதை முயற்சிகளைப் பார்ப்போம். பொதுவாக தாய் நாடு, சேய் நாடு, என்ற தொடர்பின் பின்னணியில் பாரதியின் தாக்கமும் பிச்சமூர்த்தி

முதலானோரின் தாக்கங்களும் ஈழத்துப் புதுக்கவிதையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. 60களிலே தான் ஈழத்துப் புதுக்கவிதை ஒளிவிடத் தொடங்கியது. தருமு. சிவராம் ஈழத்து புதுக்கவிதையின் ஆரம்ப வளர்ச்சிக்கு பாதை காட்டியவர் எனக் குறிப்பிடக்கூடியவர். தமிழகத்திலிருந்து வெளிவந்த ஈழத்திலும் தன் வருகையை உறுதிப்படுத்திய சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து' பத்திரிகையானது ஈழத்துப் புதுக்கவிதைக்காரர்களுக்கு களமாகவும் அமைந்தது. முருகையன், தா.இராமலிங்கம், மு. பொன்னம்பலம் போன்றோர் தருமு சிவராமுவின் புதுக்கவிதைப் பாதையில் அடியெடுத்து வைத்தனர். தமிழகத்துப் புதுக்கவிதைகளில் இருந்து வேறுபட்டு ஈழத்துப் புதுக்கவிதையை கொண்டு சென்றவர்களாக மேற்கூறியவர்களுடன் சண்முகம் சிவலிங்கம். நுஃமான் போன்றோரையும் குறிப்பிடலாம். இக்காலகட்டத்திலே வெளிவந்த கவிதைத் தொகுதிகளுள் தா. இராமலிங்கம் எழுதிய புதுமெய்க்கவிதைகள்" என்ற பெயரில் வெளிவந்த தொகுதி குறிப்பிட்டுச் சொல்ல தக்கதென விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1855இல் அமெரிக்காவில் தோன்றி 1934இல் தமிழகத்தில் வெளிவந்த புதுக்கவிதையானது 1960இல் ஈழத்தில் மலர்ந்தது எனக் குறிப்பிடுவது சற்று வருத்தத்துக்குரியது. ஈழத்து ஆரம்பகாலப் புதுக்கவிதைகள் பற்றி ஆய்வு செய்த எம்.ஸ்ரீபதி (இவது ஆய்வாளர்) "1934 இல் நவசக்தியில் இவது புதுக்கவிதை வெளிவந்தது" எனக் குறிப்பிடுகிறார். ஆனால் ஸ்ரீபதி குறிப்பிடும் கவிதை வசன கவிதையாகவே பெரும்பாலும் உள்ளது. இவர் தி. வரதராசனின் (வரதர்) முதற் கவிதையை அதிகம் சிலாகித்துக் கூறியுள்ளார். ஈழத்துப் புதுக்கதைகள் பற்றி ஆய்வு செய்த கலாநிதி செ. யோகராசா "ஈழகேசரியிலே 1947இல் 'ஓர் இரவினிலே" என்ற தலைப்பில் வரதர் எழுதியிருந்த புதுக்கவிதையை ஈழத்தின் முதல் புதுக்கவிதை என்று கருதவேண்டியுள்ளது" எனக் குறிப்பிடுகின்றார். இவ்விருவரும் கூறியதிலிருந்து 'ஓர் இரவினிலே' என்ற புதுக்கவிதைதான் ஈழத்தின் முதல் புதுக்கவிதை என்பதில் சந்தேகமில்லை. மேலும். செ. யோகராசாவின் "ஆரம்ப கால ஈழத்துப் புதுக்கவிதையாளருள் வரதர், சோதி (சோ.தியாகராசா), விஜயன், தங்கம், ராம் முதலியோர் குறிப்பிடதக்கவர்கள். ஈழகேசரியிலும் மறுமலர்ச்சியிலும் இவர்களது புதுக்கவிதைகள் பெரும்பாலும் வெளிவந்துள்ளன" என்றும் குறிப்பிடுவதிலிருந்து 1947 இல் ஈழத்துப் புதுக்கவிதை தோற்றம் பெற்றுள்ளது எனலாம். "வசனத் தன்மை அதிகம் காணப்படுகின்ற, படிமம் - குறியீடு இல்லாமல் அதிகம் உருவகம் - உவமைகள் கையாளப்படுகின்ற, கணிசமான அளவுக்குச் சமூகசார்பில்லாமல் இயற்கை பற்றிய



கவிதைகளாக இருந்த ஆரம்ப நிலைப் புதுக்கவிதைகளைத் தொடர்ந்து ஓர் இருண்ட தன்மையை ஈழத்துப் புதுக்கவிதை கொண்டிருந்தது. எம். ஸ்ரீபதி அவர்கள் குறிப்பிட்ட மேற்கோளுக்கமைய ஆய்வாளர் பொ. கமலரூபனின் ஆய்வின் முடிவு "40களிலேயே முதல் புதுக்கவிதை வெளிவந்த போதிலும் அத்தொடக்க காலத்தில் மூன்று நான்கு பேர் மாத்திரமே இப்புதுக்கவிதை முயற்சியில் ஈடுபட்டனர் என்றும் இதுவே இவ் இருண்ட தன்மைக்கு காரணமென்றும்" குறிப்பிடுகின்றார். ஈழத்து விமர்சகர்களான கைலாசபதி, முருகையன் போன்றோர் "ஓசை நயத்துக்கு அழுத்தம் கொடுத்து தம் கவிதைப் படைப்பின் தரத்தைக் குறைத்துக் கொள்வோர் ஒரு புறமிருக்க, ஒலி நயத்தின் அடிப்படை அம்சங்களைக் கூட விளங்கிக் கொள்ள முடியாத வசன கவிதைக் கூட்டம் ஒன்று மறுபுறம் உள்ளது" எனக் குறிப்பிட்டதும் இன்றும் கூட புதுக்கவிதையை ஏற்காத ஒரு கூட்டத்தினரும் இருக்கும் நிலையில் நிகழ்ந்திருக்கலாம் என கூற முடியும்.

'பல இலக்கியத் துறைகள் இருந்த போதும் ஈழத்தைப் பொறுத்தவரை மிகப் பரந்தும் உயர்ந்தும் நிற்பது தமிழின் கடைக்குட்டியான புதுக்கவிதை வடிவமாகும்" என்று பொ. கமலரூபன் குறிப்பிடுகின்றார். இப்புதுக்கவிதைத் துறையில் நாளுக்கு நாள் பல இளைஞர்கள் ஆர்வத்தோடு பங்கேற்றுக் கொள்கின்றனர். இதனால் புதுக்கவிதைகள் இன்று பல்கிப் பெருகி வந்த வண்ணம் இருக்கின்றன. இந்நிலையில் ஆரோக்கியமான புதுக்கவிதை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய முற்படுவார் மரபுக் கவிதைகளில் பரிச்சயமும் புதுக்கவிதைகளைத் தேடிப்படிக்கும் ஆர்வமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். உண்மையில் மரபுக் கவிதைகள் பற்றியும் அதன் இலக்கண இயல்புகள் பற்றியும் புதுக்கவிதை எழுதுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புற்றீசல் போன்று புதுக்கவிதை பெருகுவது போல, விட்டில் பூச்சிகள் போல அவை வீழ்ந்து அழிவதையும் பார்க்கும் போது மரபுக் கவிதைகள் போல நின்று நிலைக்காமல் போவதற்கு என்ன காரணம் என்பதை புதுக்கவிதை எழுதப்புகும் புதுக்கவிஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மழைக்குத் தோன்றி மடிந்து போகும் புற்றீசல்களோ, விளக்கில் விழுந்து அழிந்து போகின்ற விட்டில் பூச்சிகளோ அல்ல புதுக்கவிதைகள். மாறாக எரிந்து சாம்பலிலிருந்து மீண்டும் எழுந்து பறக்கும் பீனிக்ஸ் பறவைகள் புதுக்கவிதைகள் என்பதை உணர்த்துவோம்.

**26.12.2010 கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நீ.பி அருளானந்தத்தின் (கடந்து போகுதல்) கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில**

**வரவேற்புரை:சி.பாஸ்க்கரா (உதவி நிதிச் செயலர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)**

நேற்று யேசுநாதர் பிறந்தநாள்.அற்புதமானதோர் படைப்பு இன்று வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. .

**தலைமையுரை: வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர் தினக்குரல்)**

செய்தித் தயாரிப்புப் பின்னணியில் எழுதிப் பழக்கப்பட்டவன் நான். சொல்லியிருக்கிறார். அன்புத் தொல்லையின் நிமித்தமே இவ்விழாவுக்கான தலைமையை ஏற்றேன். ஆரம்ப காலத்திலிருந்தே எமது பத்திரிகையில் இலக்கியவாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். எமது தினசரியிலும் வார வெளியீட்டிலும் ஒரு பக்கத்துக்குக் குறையாமல் இலக்கியத்துக்கு ஒதுக்குகிறோம். இலக்கியத்தையும் செய்தியாக்கி வெளியிடுகிறேம் மா.பாலசிங்கம், தம்புசிவா ஆகியோர் இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்துத்தந்து பிரசுரிக்க உதவுகிறார்கள். 'தினகரன்' பத்திரிகையில் பேராசிரியர் க.கைாசபதி பணியை நாமிப்போ செய்து வருவதாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அடிக்கடி பாராட்டுவதுண்டு. பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதியிருப்பது 'கடந்து போகுதல்' கவிதைத் தொகுதிக்குப் பொருத்தமென்று நினைக்கிறேன். தமிழ் இலக்கியத்துக்கு மேலும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம்.

**சிறப்புரை: எஸ்.ஆர்.தனபாலசிங்கம் (ஆசிரியர் 'நீங்களும் எழுதலாம்' சஞ்சிகை'**

நட்பார்ந்த உரிமையடன் இவ்விழாவில் பேசும்படி நீ.பி.அருளானந்தம் கேட்டார். ஒரு வருடகால நேரடித்தொடர்பு அருளானந்தத்தோடு உண்டு. அவரது படைப்புகள் ஊடாகவே அவரை வெகுவாக அறிந்து கொண்டேன். 'வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து' முதல் தொகுப்பை இன்னமும் படித்ததில்லை. தொடர்ந்து படைத்து வரும் ஒரு படைப்பாளி. தமிழக சஞ்சிகைகளிலும் படைப்புகள் வெளிவந்துள்ளன. 'கடந்து போகுதல்' அற்புதமான தலைப்பு. நன்மையும் தீமையுமாகப் பல விடயங்கள் கடந்திருக்கின்றன தொகுப்பி காணப்படும் நாற்பத்து நான்கு கவிதைகளுள் ஒன்று மிக நீண்டது. நாற்பத்தியிரண்டு கவிதைகள் சாதாரணமானவை. 'ஆதாம் ஏவாள் ஒரு மறுவாசிப்பு' காவிய வடிவிலானது. முப்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளில் எமது துன்பங்களைப் பாடுகிறார். ஆன்ம விடுதலையைத் தேடுபவையாகக் காணப்படுகின்றன.

நடுக் காட்டுப்பாதை ஆன்மீகமானது 'கடந்து போகுதல்' கவிதை காவிய வடிவம் போல உள்ளது. கவிஞனுக்குப் படிமம் தேவை. அருளானந்தத்தின் கவிதைகள் நீண்ட படிமங்களைக் கொண்டவைகளாக உள்ளன. இது வாசகனுகக்குச் சிரமத்தைக் கொடுக்கும் கதைத் தன்மையைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. 'ஆதாம் ஏவாள் - ஒரு மறுவாசிப்பு' தொகுப்பின் நூற்றிமூன்று பக்கங்களைப் பிடித்துள்ளது. கேள்விக்கு உள்ளாக்குகின்றது. தெளிவின்மை உண்டு 'கருவேலமுள் குத்தும் வலி' யில் கருவேலமுள் இந்தியாவை ஞாபகப்படுத்தியது. இத்தொகுப்பிற்குச் சிறப்பாக இருப்பது இது நாட்டில் நடந்து துயரங்களின் எதிரொலியாக இருப்பதே. அந்தவகையில் ஆவணப் பெறுமானத்தைப் பெறுகின்றது. 'தீத் தொடல்' கவிதையும் ஆவணப்படுத்தத்தக்கதே. நாற்பத்தியிரண்டு கவிதைகளும் ஆழமானவைகளாக இருக்கின்றன. பல விடயங்களை மிகவும் துணிகரமாகச் சொல்லியிருக்றிார். இத்தொகுப்பின் மூலம் நீ.பி.அருளானந்தத்தைச் சிறந்த கவிஞராகக் காணமுடிகின்றது.

**முதன்மை விருந்தினர் உரை: வைத்திய கலாநிதி சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்**

நாடகம், கவிதை, நாவல், சிறுகதை என்பவைகளில் அருளானந்தம் தீவிர ஈடுபடு காட்டி வருகிறார். சொந்த அனுபங்களை இவைகள் ஊடாகத் தருபவர்.

**கருத்துரை: கவிஞர் மேமன்கவி**

'ஆதாம் ஏவாள் ஒரு மறுவாசிப்பு' என்ற கவிதை குறித்துச்சொல்வது எனக்குச் சங்கடமானது. அதுமதம் சார்ந்தது. 1970க்குப் பின்பே ஈழத்துக் கவிதைக்கு நவீன, புதுக்கவிதை வடிவங்கள் வந்தன. இன்று பரபரப்பாக எதைப்பற்றிப் பேசவேண்டும்? நிகழ்கால இலக்கியம், கடந்தகால இலக்கியங்கள் குறித்துத்தான் பேசவேண்டும். நீ.பி. அருளானந்தத்தின் 'வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து' கவிதைத் தொகுப்பு கடந்த காலத்தைப் பற்றியது. 'கடந்து போகுதல்' தொகுப்புக் கவிதைகளில் கலா ரீதியான படிமங்கள், விவரணத் தன்மைகள் அதிக முண்டு. இன்றைய காலகட்டத்தை விட்டுக்கடந்த காலத்தைக் காட்டுபவை. ஒவ்வொரு கவிதை குறித்தும் கட்டுரை எழுதலாம். விரிவாக ஆராயவேண்டும். தமிழகப் புதுக்கவிதையாளர் பழமலின் வசனப் பாங்கான கவிதைத தன்மையில் நீ.பி.அருனாந்தம் எழுதியிருக்கிறார். ஈழக் கவிஞர் சோ.ப.வையும் நினைக்க வைக்கிறார். ' ஆதாம் ஏவாள் - மறுமலர்ச்சி' ஒரு சோதனை முயற்சியாகவே தெரிகிறது. பன்முகப்பட்ட செய்திகளைத் தரும் கவிதைகள் இத்தொகுப்பில் இருக்கின்றன

**கலாபூஷணம் கலைச்செல்வன்**

பாதிக்கவிதைகள் யுத்தம் பற்றியவை. மீதி கண்ணதாசனின் 'யேசு காவியம்' போன்ற குறுங்காவியம் யுத்த வெறுப்பழைபத் தார்மீகக் கோபத்தோடு கவிதைகளாக்கிவிருக்கிறார். நீண்டதாகக் கவிதைகளுள்ளன. நீ.பி. அருளானந்தத்தின எழுத்துக்களும் ஆளுமை உண்டு.

**திறனாய்வாளர்: தம்பு சிவா**

இது வசன. நவீன, புதுக் கவிதைகளை முன்னிலைப்படுத்தும் காலம். தமிழ்க்கவிதைக்குப் புது வரவாக மகாகவி சுப்பிரமணியபாரதியின் வசன கவதைகள் அறிமுகமாகின. சுதந்திர தாகத்துக்கு ஊட்டத்தைத் தந்தன. பாரதிதாசன் கவிதைகளில் அரசியல், சமூகப் பாதிப்புகள் காணப்பட்டன. புதிய பாடு பெருள்களை எளிய நடையில் தந்தார். திராவிடப் பின் புலம் இருந்தது.



1934இல் 'மணிக்கொடி' இலக்கிய சஞ்சிகையில் ந.பிச்சமூர்த்தியின் புதுக் கவிதைகள் வெளிவரத் தொடங்கின. மரபுவாதிகள் ஏளனம் செய்தனர்.தமிழகக் கவிதா உலகின் தாக்கத்தால் ஈழத்தில் வரதரின் 'மறுமலர்ச்சி' இலக்கிய் சஞ்சிகை வெளிவந்தது. இதில் மஹாகவி கவிதைப் பங்களிப்புச் செய்தார். வரதரும் எழுதினர். பேச்சோசை உச்சம் பெற்றது. 'ஈழ கேசரி' இலக்கிய ஏடும் இப்போக்கை உள்வாங்கியது. மஹாகவியோடு இ.முருகையன், அ.ந.கந்தசாமி சில்லையூர் செல்வராசன் ஆகியோரும் கவிதைப் பங்களிப்புச் செய்தனர். சி.சு.செல்லப்பாவின் தமிழகத்து இலக்கிய சஞ்சிகையான 'எழுத்து' சஞ்சிகையும் புதுக் கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தது. புத்திலக்கிய எழுச்சிக்கு 'எழுத்து' வடிகாலாக அமைந்தது. சமகால அன்றாட வாழ்வை, கலாபூர்வமாக இலக்கைக் கவிதை பரம்பல் செய்தது. இக் காலகட்டத்தில் முற்போக்கு இலக்கியப் போராட்டம் தோற்றுவாயானது. ஓர் உந்த சக்தியாக இருந்தது. 'எப்போதும் கவிஞரல்ல.. என வித்துவான் வேந்தனார் பாடினார்.1980இன் முற்கூற்றில் நவீன புதுக்கவிதை ஈழத்திலும் எழுச்சி கொண்டது. முழுநேர எழுத்துப் பணியைச் செய்து கொண்டிருப்பவர். நீ.பி அருளானந்தம். அவரது துணிச்சல் ஆச்சரியப்பட வைக்கின்றது.

ஏற்புரை : நீ.பி.அருளானந்தம்

சமூகத்தைப் பற்றித்தான் எழுதியிருக்கிறேன். எனது எழுத்துகளைச்சமூகம்படிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனது கதைகள் குறித்துச் செ.யோகநாதன் ஆழமற்றவை என அபிப்பிராயம் சொன்னார். இப்படிச் சொல்வதன் மூலமாக எழுத்தாளனது சுதந்திரத்தைக் குறுக்கப்படாது என வல்லிக்கண்ணன் மறுத்தார். நூலை ஆழமாகப் படிக்காது விமர்சிப்பது எனக்குப் பிடிக்காத காரியமாகும். நூலை நன்றாகப் படிக்க வேண்டும் சிறந்தவைகள் விரிவாக, ஆழமாக வாசிக்க வேண்டும். நூலின் நயத்தைக் கூறச்சொன்னால் விமர்சனம் செய்கின்றனர். இது கவலை தருகிறது.

இத் தவறுகளைச் சுட்டிக்காட்டப் பார்வையாளர்களிடம் தைரியம் இல்லை. தராசின் கோலின் பக்குவம் படைப்புகள்பற்றிச் சொல்வோருக்கு இருக்க வேண்டும். புதுமைப்பித்தன் படைத்த சிறுகதைகளில்

நான்கைந்து சிறுகதைகதைத்தான் சிலாகித்துச் சொல்கின்றனர். அபிப்பிராயம் கூறுமுன் நூலை ஒழுங்காக வாசிக்க வேண்டும். பேராசிரியர் கா.சிவதம்பி 'நாவல், சிறுகதை, கவிதை எல்லாமே எழுதுகிறாய்.கவிதையில் கவித்துவம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் கவிதைகளைப் படிக்க வேண்டும்! என்றார். இளம் பிள்ளையொன்றிடம் கொடுத்தே தன்னுரையை எழுதித்தந்தார். நூலாக்க முயலும் போது பல வகைகளிலும் பிரயத்தனப்படுவேன்.

மா.பா.சி.

(நன்றி-தினக்குரல்)

*******

## சில மௌனங்களின் பின்னால்

சில மௌனங்களின் பின்னால்
நிறைய பேச வேண்டியும்
உள்ளது

காவு கொள்ளப்பட்ட யுகத்துள்
கண்ணீருள் மறைந்துள்ள
நிஜங்கயை
பற்றி பேசவேண்டும்
போலவுள்ளது....

ஆனாலும்
உள்ளுக்குள் ஓட்டையிடும்
நரியின் நண்டுகளின் செய்கை
கண்ணீருள் மறைந்துள்ள
நிஜங்களை விட
அதிகமாக வலிக்கின்றது

நானுத் சிலுவையில்
தொங்கியவாறு
கைகளை நீட்டி
உதவி செய்ய நினைக்கும்
போது!
சிலுவையை பிடித்த
கையை நண்டுகள் கடிக்கின்றன
வேதனைதான்
ஆனாலும். முயற்சிப்போம்?


எஸ்.பி. பாலமுருகன்



## ஓர் இரசனைக் குறிப்பு

### 'ஏ. இக்பாலின் கவிதைகள் 100'

-ஷெல்லிதாசன் -




"முற்போக்கு இலக்கியக் குரல் மனிதநேயக்குரல், மக்களின் போராட்டக்குரல், அதிகார வர்க்கத்தின் அடக்கு முறையையும், ஒடுக்கு முறையையும், சுரண்டலும், சூறையாடலும' எங்குள்ளதோ அங்கு இந்தக்குரல் ஓங்காரமாய் ஒலித்துக் கொண்டிருக்கும்"

'கவிஞர் இக்பாலின் கவிதைகள் 100க்கான படிப்புரையில் முதுபெரும் முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் மேற்குறிப்பிட்டவாறு சொல்லியுள்ளார். அந்த வகையில் கவிஞர் அவர்களின் கவிதைக் குரலும் அமைந்துள்ளதா என்றால் ஆமென்றே அடித்துச் சொல்லலாம். இவற்றிற்கு உதாரணமாக பல கவிதைகளை எடுத்துக் கூறமுடியுமென்றாலும் ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறு என்பதாக

"நீ நினைப்பதை முழுமையாய் சுருட்டியும்
நீசத்தனத்தால் எதிர்க்கருத்துள்ளவர்
நீண்டிடக் மனிதனாய் நேசிப்பவன் ஒரு
மடையன்! பெருமடையன்!"

"வாரும் இங்கே சேரும்" (46வது கவிதை) எனும் கவிதையில் அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக ஆக்ரோஷமாக எழும் இவரது கவிவரிகள் அதிகார வர்க்கத்தினரை மட்டுமல்ல, அவர்களின் அடிவருடிகளையும் எள்ளிநகையாடி நிற்கின்றது.

நாற்பது வருடங்களுக்கு மேலாக 'வயதென்னடா வயது, வாலிபமென்பது மனதினிலே' என்றவாறு ஓயாத கவிபெரு நதியாக, பல்துறை ஆளுமையாக செயற்பட்டு வருபவர், கவிஞர் ஏ. இக்பால் அவர்கள். அவரது கவிதைகள் 100' பற்றிய எனது இரசனைக் குறிப்புக்களில் இன்னும் சில இங்கே

இடப்பற்றாக்குறை காரணமாக மிகச்சுருக்கமாக கவிஞர் இக்பால் அவர்களின் கவிதைகள் அவரது வயது, காலப்பகுதி, அரசியல் நிலமைகளுக் கேற்றவாறு நகர்ந்து செல்கின்றன.

"அங்கமளைந்து அசைந்து பறந்திடும்
அணியுடை மேலசைய – அவள்
கொங்கையுயர்ந்த தடத்தினை மூடிடும்
கொலுத்துகில் அலையசைய

சுமார் 40 வருடங்களுக்கு முன் அவரது இளமை இதய உணர்வசைவு ஊற்றாகி ஆசையின் அசைவு எனும் கவிதையில் வெளிப்படுவது விந்தையல்ல.

'அழிவே இன்னும் அழிக்க நாட்டில்
அறிவை ஏனோ தெரிந்தாயே!
பழியே இவர்கள் பழிக்கும் உயிர்கள்
பலியா நாட்டின் விதியாமோ'

'ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதாண்டா வளர்ச்சி' என்ற பட்டுக்கோட்டையின் பகட்டற்ற வரிக்கமைய 1988ல் இவரது வளர்ச்சி அறிவார்ந்த ஒரு நிலைமை நோக்கி நகர்ந்துள்ளதை கலையின் காவல் இழந்தாயே' எனும் கவிதையில் அவதானிக்க முடிகிறது.

மனிதன் பல்வேறு குணஇயல்புகளை கொண்டவன். இவற்றுள் தீய குணங்களே மிகையாகி ஆட்சி செலுத்துகின்றன.

'தன்னில் உயர்ந்த தன்மையுடைய
தரத்தில் ஒரு மனிதன்
உன்னி யுயர்தல் பொறுக்காதுலகில்
உழன்று மடிகின்றான்'

'மனித குணரகங்கள்' எனும் கவிதை இப்படியாக பொறாமை நெஞ்சங்களை சாடி நிற்கின்றது. வெற்றி வீரர்களாக சிலர் தம்மை பிரகடனப்படுத்திக் கொண்டாலும் நாடு இன்று இன. மத, மொழி, வெறிச்சேற்றில் வீழ்ந்து தோல்வியடைந்த நிலையில் இருப்பதே யதார்த்தமானது.



"ஒருவரை ஒருவர்
அடக்கிட முனைவதை
அழித்திட வழிகாட்டும்"
நமதுயர் நாட்டினை
நாமுணர்ந்தேற்றிடும்
நலத்தினை உயர்வாக்கு'

'நாட்டைக் காப்பாற்று' என்னும் கவிதையில் வீழ்ச்சியுற்ற நாட்டைப் பற்றிய அவரது வேதனை வெளிப்பட்டு நிற்பதை அறியக்கூடியதாக அமைகிறது.

இதுபோன்று, மதங்களை வியாபாரப் பொருளாக்கி குளிர்காயும் மந்திகளின் தன்மையை

'ஒவ்வொரு மனிதனின்
சில்லறைக் காசுகள்
தேவாலயத்தை பெரும் வங்கியாக்கிற்று
நம்பிக்கையாளர்களின் வீடோ பெருமாளிகை' என 'சில்லறை' எனும் கவிதை சாடி நிற்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இப்படியாக பல சிறந்த கவிதைகளை உள்ளடக்கமாக கொண்டு திகழும் ஏ.இக்பால் கவிதைகள் 100' அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

முடிவாக பேராசிரியர் எம்.ஏ. நு.:.மான் சொல்வது போல்! இவரது கவிதைகளில் உணர்வைவிட சிந்தனைக்கனதி முனைப்பாக இருக்கும் என்பதற்கமைவாக எமது சிந்தனைக்கும் செழுமையூட்டி விருந்தளிக்கின்றது என்றால் மிகையாகாது. தொடரட்டும் இவரது இலக்கியப்பணி தோல்விகளை துவம்சம் செய்தபடி!

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஏ. இக்பால் கவிதைகள் 100' |
| நூலாசிரியர் | : ஏ. இக்பால் |
| முகவரி | : ஏ. இக்பால்<br>றிபாயா மன்ஸில்<br>தர்கா நகர் |
| வெளியீடு | : சேமமடு பதிப்பகம் |
| விலை | : ரூபா 280.00 |

## கவிதை

கவிதை என் உயிரின் வியர்வை
கனன்றெழும் உணர்வின் பிழிவு
தவப்பயன். மொழியின் செங்கோல்
தரணி வாழ் கலைக்கு வேராம்

தளை தனை அறுக்கும் போர்வாள்
தாவிடும் வேங்கை. கூர் வேல்
அழகொளிர் மலர்ப் பூங்காடு
அருந் தமிழ்த் தேனின் கூடு

தாய் முலை அருளுந் தண் பால்
தாங்கிடுந் தந்தை திண் தோள்
தேய்விலா மொழித் தேர்க் கச்சாணி
தேன்நிலாப் பொய்கைத் தோணி

மாசிலாத் தங்கத் தொட்டில்
வாலிபத் துய்க்கும் கட்டில்
வீசுமென் தென்றற் காற்று
வேகங் கொள் புயலாம் சூற்று

சிலிர்த்தெழ வைக்குங் சாறு
தீர்ந்திடாத் தண்ணீ ராறு
மலர் மணம், மயிலின் ஆடல்
வண்டிசை, குயிலின் பாடல்

வெண்பனி அமுதக் குழம்பு
வீரமாம் தீப் பிளம்பு
மண்தனில் கவிதைக் கீடாய்
மற்றெதும் இல்லைப் பாராய்

—நிலா தமிழின் தாசன்—

## வினை விளைவிப்பேன்

சுனாமி வீடொன்று
சுந்தரமாய் வேண்டுமென்று
சுத்தாத இடமில்லை

கனாவினிற் கூட
கான வில்லையே
கண்கவர் வீட்டை

வினாவுகள் பலவிற்கு
விடைகளீந்தும்
வியர்த்து நின்றும்
வீணாய்ப் போயிடுமோ
விரைந்த முயற்சிவிடமாட்டேன்
வினைவிளைவிப்பேன்

நிலாவெளியூர்
ஜெகதர்மா



## செய் அல்லது செத்து மடி

செய் அல்லது செத்து மடி என்றனர்
செய்து மடிந்தவர்கள்
செய்தியாக பத்திரிகைகளில்!
செத்துக் கொண்டிருப்பவர்களில் பலர்
ஏதிலிகளாக சிறை முகாம்களில்!
செய்யச் சொன்னவர்களில் சிலர்
உல்லாசமாக உப்பரிகைகளில்!
செந்தமிழிற்கு தமிழகத்தில்
செம்மொழி அந்தஸ்து
செத்துப்பிழைத்த (ஈழத்) தமிழனுக்கு
அகிலமெலாம் அகதி அந்தஸ்து!

ஆ. அசனார்

## சிறுமியும் தேநீர்க்கோப்பையும்

அழகிய சிறுமி ஒருத்தி
தேநீரை கோப்பையில் வார்த்துத்தந்தாள்,
பருகப் பருக குறைந்து கொண்டிருக்கிறது.
ஆனால் குறைவே இன்றி
நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது மனக்கோப்பை!
அவளின் அப்பழுக்கற்ற புன்னகையால்!!

## சுழற்சி மையம்

மின் விசிறி
ஓர் மையத்தைப் பற்றி சுழன்று கொண்டிருக்கிறது,
மேலும் ஆளியின் உதவியுடன் இயங்குகிறது.
நம்முள் பலரும் சுழன்று கொண்டிருக்கிறோம்
மையம் எதனையும் பற்றாமலேயே?
பிறர் ஆட்டிவைக்கும் பொம்மையாகவே
நமது இயக்கமும் நிகழ்கிறது!!

கமலசுதர்சன், பருத்தித்துறை

## முன்னைய நிலைக் களத்தில்

முன்னைய நிலைக் களத்தில்
இன்றைய நகர்வுகள்
அமுங்கிய வரிதலை
மீண்டும் வெடிக்குமொவென
எதிர்வுறும்
சம்பவக் கோர்வைகள்
செய்திப் புகைச்சல்களாகி
சொந்தம் மீண்ட மண்ணில்
இன்றைய இருப்புகள்
நிச்சயமற்றதான
சமிக்கைக் கூறுகளோ?
என்று

எனதுள்ளான
வலிகள் மொழிகளாகி
மறு மனங்களோடு மொழிப்பட மடியாது
மௌனத்தில் குமைந்து
பொருமுவதால்
மன அழுத்தத்தின்
உச்ச நிலையில்
உயிர் ஊசலாடுது

சம்பவப் பகிர்வுகள்
சங்கமாகும் இடங்களில்
நம்மோடு இணைந்து ஒட்டும்
நிழல்களே பகிர்வுகளை
புனைவுகளாக்கி
காட்டிக் கொடுக்கும்
எதிரித் தனமாவதால்
மௌனங்கள்
பேணுதற்குரியனவாகுது
படுவாழ்வின் பக்கங்களை
மீண்டும்
புரட்டிப் பாக்க வைக்கும் பயத் தோற்றங்களாக
கடுகலன் காவிகளும்
கடத்தலும் கப்பமும்
களவாடும் கூட்டமும்
ஆங்காங்கே
தலை காட்டித் தாண்டவமாடுவதால்

எமக்கான வாழ்வியலின்
எந்தப் பக்கங்களும்
துயர்க் காற்றின் அமுக்கத்தால்
சூறாவளிச் சுழல்களாக
மனிதமென வாழ்வோமா?

அல்வாயூர். சி. சிவநேசன்



## குடிப்பதுமில்லை குடிகெடுப்பதுமில்லை

காசும் இல்லை;
களஞ்சும் இல்லை.
நகையுமில்லை
நட்டுமில்லை

காணி இல்லை
மெத்தையும் இல்லை
வயலும் இல்லை
வாய்க்காலும் இல்லை

கட்டிலும் இல்லை
மெத்தையும் இல்லை
தொட்டிலும் இல்லை
தாலாட்டும் இல்லை

படிப்பும் இல்லை
பட்டமும் இல்லை
நோயுமில்லை
மருந்துமில்லை

குடிப்பதுமில்லை
குடி கெடுப்பதுமில்லை
போதை வஸ்துப் பழக்கம்
அறவே இல்லை

நம்மில் யாரும்
காடையர் இல்லை
கொலை, கொள்ளை
கற்பழிப்பு இல்லை

சொல்லடியும் இல்லை
பொல்லடியும் இல்லை
கல்லடி இல்லை
ஷெல்லடியும் இல்லை

வர்க்கம் இல்லை
வர்க்கப்போரும் இல்லை
சுரண்டலும் இல்லை
புரட்சியும் இல்லை

எல்லை கடப்போம்
எங்கும் போவோம்
பாஸ்போர்ட் எதுவும்
எடுக்க மாட்டோம்

கூடு எங்கள் வீடு
காடு எங்கள் நாடு
பாடுவது தொழில்
தேடுவது இரை

நாங்கள் யாரென்று
சொல்லுங்கள் பார்க்கலாம்
ஆ.... தெரியவில்லை?
நாங்கள் தான் குருவிகள்

கா. தவபாலன்
பேராதனை

## சரியெனப்பட்டது...

அவர் தனக்குச்
சரியெனப்பட்டதைச் செய்கிறார்
நேற்றுச் சரியெனப்பட்டது
ஒன்றாகவும்
இன்று சரியெனப்படுவது
இன்னொன்றாகவும்
நாளை சரியெனப்படுவது
வேறொன்றாகவும்
நாளை மறுதினம்
சரியெனப்படுவது
மற்றொன்றாகவும்
இருக்கக்கூடும் - ஆயினும்
அவர்
நேற்றுச் சொன்னவற்றுக்காக
செய்தவற்றுக்காக
இன்று இன்னொன்றைச் சொல்கிறேன்
செய்கிறேன் என்பதற்காகவோ
நாளை வேறொன்றைச் சொல்வேன்
செய்வேன் என்பதற்காகவோ
வருத்தப்பட்டதுமில்லை
வருத்தப்படப் போவதுமில்லை
ஏனெனில்
எச்சந்தர்ப்பத்திலும் அவர்
தவறுவிட நியாயமில்லை
ஏனெனில்
அவர் பொருட்டு
அவர் தனக்குச்
சரியெனப்பட்டதையே
என்றும் சொல்கிறார் : செய்கிறார்

**-எஸ்.ஆர்.தனபாலசிங்கம் -**



## வாசகர் கடிதம்

இரு திங்கள் இதழான நீங்களும் எழுதலாம் படிக்கும் வாய்ப்புக் கிடைத்து படிக்கத் தொடங்கியனும் மூங்கில் வனத்தினுள் தொலைந்து' துண்டானேன். கவிதை மானுடத்தின் பொது மொழி. அதற்காக வெளிவரும் இவ்விதழ் மடியாமல் தொடர வாழ்த்துக்கள்!

ஆடி – ஆவணி இதழில், ஆசிரியரின் கருத்து அண்மிய சமூக அவலங்களைப் புடமிட்டுக் காட்டுகிறது. இன்னுமொரு பாரதிக்காய், யாமெலாம் தவம் இயற்றுகிறோம். கற்பாறையில் வேண்டாத பாகங்களைச் செதுக்கிக் காண்பதே சிற்பக்கலை. அது போன்றதே கவிக்கலையும்.

தங்கள் இதழின் வடிவமைப்பும், சொற்சிக்கனமும் பிடித்துப் போய்விட்டது.

எழுதுவது குறைந்து, கேட்பதும், பேசுவதும் மேலாதிக்கம் செய்யும் 'இணைய உலகில்' எங்களையும் எழுத, வாசிக்கத் தூண்டும் தங்கள் பணி சிறக்கட்டும்.

தோழமையான வாழ்த்துக்களுடன்,
ச. சசீதரன்
(விரிவுரையாளர்)
சமூகவியற்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

************************

### நீங்களும் எழுதலாம்

"நீங்களும் எழுதலாம்" எனும் நல் நோக்குடன்
நீங்கள் தொடர்ந்திடும் முயற்சிக்கெம் வாழ்த்துக்கள்.
நாங்களும் எழுதலாம் எனும் உயர் நினைப்பை
நமது நெஞ்சினில் வளர்த்திடும் ஊக்கத்தால்
நாங்களும் எழுதுவோம்! நாட்டினில் நலமே
நிலவிடும் வண்ணம்! களமது தந்தே
"நீங்களும் எழுதலாம்" எனச்சொல்லும் இதழே!
நீடுவாழ் நானிலம் என்றும் சிறந்திடவே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

அன்புடையீர்,

தாங்கள் அனுப்பிய "நீங்களும் எழுதலாம்' ஆடி-ஆவணி இதழ் கிடைத்தது. நன்றி . கையில் எடுத்ததுமே வாசிக்கத் தூண்டும் அடக்கமான அமைப்பு தனியே கவிதைக்கு மட்டுமான இந்த வெளியீட்டு முயற்சி பாராட்டத்தக்கது. ஆரம்ப எழுத்தாளர்கட்கும் 'நாமும் எழுதலாம்' என்ற தன்னம்பிக்கையை ஊட்டக் கூடிய பெயர் 'நீங்களும் எழுதலாம்'
தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள். சிறப்பான கவிஞர்கள் பலரை வளர்த்தெடுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நன்றி

**-மண்டூர் அசோகா-**

## நீங்களும் எழுதலாம்

நீங்களும் எழுதலாம்
தலைப்பினைப் பார்த்தேன்!
எழுத ஆசை கொண்டேன்
எதனை எழுத...........
சிந்தையில் தோன்றியவை,
இடப்பெயர்வுகளும்
ஆட்கடத்தல்களும்
கைதுகளும்
காணாமற் போனோரும்
விலையேற்றங்களுமே!
அதிகரித்த துயரங்களை
அரைவாசியாக்க
மனதிற்கு
மகிழ்வளிக்க
நீங்களும் எழுதலாம்.

தி. சுதர்மன்

× × × × × × × × × × × × × × × × × × × ×

தம்பிக்கு தமிழ் வணக்கம்! புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களும் கூட, நீங்கள் கையளித்த நீ எழுதலாம், கவிதை இதழும், கவிஞர் ஷெல்லி தாசனின் "செம்மாதுளம் பூ" கவிதை நூலும் படித்தேன் நன்றிகள்.
தங்கள் திருமுயற்சிக்கு எனது பாராட்டுக்கள். உங்கள் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் எனது வாழ்த்துக்கள் நிறையவே.
உங்கள் பின்னால் பெரும் படையணியாக கவிஞர்கள் திரண்டுநிற்பது வியப்பையும் மன நிறைவையும் தருகிறது.
இதழினை இன்னும் இரண்டு அங்குலத்தால் அகலித்தால் மேலும் அழகாகவும், கவனிப்பையும் அதிகரிக்கும்... என்பது எனது கருத்து பொருந்துமாயின் ஆலோசிக்கவும்.

- நிலா தமிழின் தாசன் -



மூலமும் பெயர்ப்பும்

## SUICIDE


There are several ways of committing suicide.
She may choose any of them.
She may die by consuming poison,
Or by throwing herself afire - after dousing
kerosene.
By jumping from the seventh floor,
Or by throwing herself before a running train.
By hanging from a roof, or a ceiling fan,
Or by drowning hereself in an ocean.
There are several ways, indeed.
Each of them more horrible than the other -
and easy too.
But the most horrible is - to die while living.
In this, nobody can notice - that a person is
dead.
This is no innovation-
Many have tried this before me,
And have succeeded.
And the best thing about this
is that
One takes no change of being saved.

மூலம் : Bikquis Zafirul Hasan
(Bikquis Zafirul Hasan, born on 1.9.1938 is an Urdu poetess living in Delhi.)

---

அச்சில்

'நீங்களும் எழுதலாம்'
ஆண்டு மூன்றின்
நிறைவாக :
'கவிதையும் கவிஞனும்'
(கட்டுரைகளும்
கவிதைகளும்)



விலை
150/-

தகவும் தகவலும் : 01
நீங்களும் எழுதலாம் வெளியீடு : 02

## தற்கொலை

தற்கொலைக்கு வழிகள் பலவுண்டு
அவற்றில் அவள் எதையுமே தெரியலாம்
நஞ்சருந்தியோ
மண்ணெண்ணையிற் தோய்ந்து
தனக்குத் தீ மூட்டியோ
ஏழாம் மாடியிலிருந்து குதித்தோ
ஓடும் புகைவண்டியின் முன்னாற்
தன்னை வீழ்த்தியோ
கூரையொன்றிலிருந்தோ
சீலிங் விசிறியிலிருந்தோ தூங்கியோ
பெருங்கடலிற் தன்னை அமிழ்த்தியோ
அவள் செத்திருக்கலாம்-
மெய்யாக, வழிகள் பலவுண்டு
ஒவ்வொன்றும் இன்னொன்றினுங்
கோரமானதும்- எளியதுங் கூட
அதி கோரமானது - வாழ்ந்துகொண்டு சாவது
இதில் எவராலும்
ஒருவர் இறந்ததைக் கவனிக்க
இயலாது
இதிலே புத்தாக்கம் எதுவுமில்லை
எனக்கு முன்னம் பலர் இதனை
முயன்றுள்ளார் வென்றுமுள்ளார்
இதிலே மிக நல்ல விடயம் ஏதெனில்
யாரும் வந்து காப்பாற்ற
இதில் வாய்ப்பளிக்கப்படுவதில்லை.

**பெயர்ப்பு : சி. சிவசேகரம்**

(1.9.1938ல் பிறந்த
பில்கிஸ் Zfருன் ஹஸன் டில்லியில் வாழும்
உருதுக்கவிஞர்)

---

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**

**வருட சந்தா 200/=**

R. Thanabalasingam
A/C No : 106653402077
Sampath Bank, Trincomalee.

**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை அனுப்பி வைக்கவும்**

**வெளிநாடு** US $10

---

**ISSN . 1800 - 3311**